1980 ஜூன் 28]

நான் அளித்த பதில்களும் ஆகும் — அவர்கள் வெளி மார்க்கெட்டிலே பேப்பர் வாங்கி நோட்டுப் புத்தகங்கள் தயாரித்து விற்கிற நிலைமையும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் தனியார்களை தவறுகள் செய்யாமல் கூடுமான வரை கட்டுப்படுத்தி மாணவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் – விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்புகள்.

(அ) தீப்பெட்டித் தொழிற்சாலைகள், இராமநாதபுரம் மாவட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ரா. உமாநாத், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ரா. உமாநாத்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" இராமநாதபுரம் மாவட்டத்தில் 1000-க்கு மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள் குளோரேட் கிடைக்காததன் காரணமாக மூடப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலையின்மை குறித்து".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சாத்தூர், சிவகாசி ஆகிய வட்டங்களில் அதிகமாகவுள்ளன. தீப்பெட்டித் தொழிற்சாலை இயங்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களில் முக்கியமான குளோரேட் கீழ்க்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து விநியோகிக்கப்படுகிறது.

1. திருவாளர்கள் பாண்டியன் கெமிக்கல்ஸ்.
   (M/s. Pandian Chemicals.)

[1980 ஜூன் 28

2. திருவாளர்கள் டிராவங்கூர் கெமிகல்ஸ்.
(M/s. Travancore Chemicals Limited.)

3. திருவாளர்கள் மேட்டூர் கெமிகல்ஸ்.
(M/s. Mettur Chemicals.)

4. திருவாளர்கள் விம்கோஸ்.
(M/s. Wimcos.)

2. இவற்றில் அதிக அளவு குளோரேட் பாண்டியன் கெமிகல்ஸ் தயாரித்து விநியோகிக்கிறது. 30 சதவிகித மின் கட்டுப்பாட்டின் காரணமாக இந்தத் தொழிற்சாலை முழு அளவிற்கு உற்பத்தி செய்ய முடிவதில்லை. மாதத்திற்கு 330 டன் உற்பத்தி செய்ய வேண்டிய இந்தத் தொழிற்சாலை ஒரு மாதத்திற்கு 210 டன்களே உற்பத்தி செய்கின்றது. 1979 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கே இந்த நிறுவனம் குளோரேட் விநியோகம் செய்கின்றது. டிராவங்கூர் கெமிகல்ஸ் தொழிற்சாலை கேரளாவில் செயல்படுகின்றது. அந்தத் தொழிற்சாலையிலிருந்து விநியோகிக்கப்படும் குளோரேட் தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கும் போதுமானதாக இல்லை. விம்கோ தொழிற்சாலை அவர்களே இந்தியாவில் பெரிய அளவில் தீப்பெட்டி தயாரிப்பதால் மற்ற தொழிற்சாலைகளுக்கு குளோரேட் சரிவர விநியோகம் செய்வதில்லை. மேட்டூர் கெமிகல்ஸ் குறைந்த அளவில் குளோரேட் தயாரிக்கிறது. மின் கட்டுப்பாட்டினால் இந்தத் தொழிற்சாலையும் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 500 சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மதுரை சர்வோதய சங்கத்தால் ஸ்ரீவில்லிப்புத்தூர், அருப்புக்கோட்டை முதலிய இடங்களில் சென்ற ஆறு மாதத்திற்குள் ஆரம்பிக்கப்பட்டவை. இவைகள் பொருளாதார காரணத்தினாலும், தடையின்மை சான்றிதழ் (no objection certificate) இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து பெற்று வெளியிலிருந்து குளோரேட் விநியோகம் பெற இயலவில்லை. உள்ளூர் வியாபாரிகளிடமும் போதிய அளவு இருப்பு இல்லாததால் அவர்களிடமிருந்தும் தேவைக்கேற்ப குளோரேட் பெற இயலவில்லை. இந்த சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் நலனை உத்தேசித்து 1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் நாளில் மாவட்ட வருவாய் அதிகாரி உபயோகிப்போர், விநியோகிப்போர் ஆகியோர் கூட்டத்தை சிவகாசியில் கூட்டி புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் மாதம் ஒன்றுக்கு இருபது கிலோ கிராம் குளோரேட் விநியோகிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துள்ளார். அந்த ஏற்பாட்டின்படி விநியோகம் நடக்கின்றது. மற்ற பெரிய

1980 ஜூன் 28]

தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தடையின்மை சான்றிதழ் (no objection certificate) பெற்று வெளியிலிருந்து குளோரேட் கொண்டு வந்து தொழிற்சாலையை இயக்குகின்றனர். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியினரும் நிலைமையை கூர்ந்து கவனித்துக் கொண்டு, அவ்வப்பொழுது தொழிற்சாலை நடப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றனர். தமிழக அரசும், மின் தட்டுப்பாட்டை திருவாளர்கள் பாண்டியன் கெமிகல்ஸ் நிறுவனத்திற்கு தளர்த்தலாமா என்பது பற்றி ஆய்ந்து வருகின்றனர். தமிழக அரசு, கேரள அரசையும், திருவாளர்கள் டிராவங்கூர் கெமிகல்ஸ் நிறுவனத்தையும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிக அளவில் பொட்டாசியம் குளோரேட் விநியோகம் செய்ய வேண்டிக் கொண்டுள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தால் எல்லாத் தீப்பெட்டித் தொழிற் சாலைகளுக்கும் குளோரேட் விநியோகத்தை ஏற்றுச் செயல்பட இயலுமா என்று இந்த அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ஆம் நாளில் மத்திய உள் துறை அமைச்சகத்திற்கு விம்கோ தொழிற்சாலையிலிருந்து அதிக அளவு குளோரேட் சிவகாசிப் பகுதிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது எந்தத் தொழிற்சாலையும் இதனால் மூடப்படவில்லை. தொழிலாளர்களும் வேலையில்லாமலில்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் இந்த அரசு வந்த பிறகு எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. நான் மிகவும் வரவேற்கிறேன். நான் புரிந்து கொள்ள விரும்புவது என்ன வென்றால் இந்த அரசு வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாகத்தான் அந்த மூடுதல் நடந்தது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் துறையிலே 14வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது என்று சொல்லி சர்க்கார் டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு மத்திய அரசின் சார்பில் பல விளக்கங்களைக் கொடுத்தவர்கள், அவர்கள் வந்த பிறகு மூன்று மாதத்தில், இருக்கிறதை மூடி விட்டார்கள். நான் கேட்க விரும்புகிறேன், அரசாங்க ரெக்கார்டிலே அவர்கள் இருக்கிறபொழுது, 3 மாத காலத்தில் இருக்கின்ற தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கிறபொழுது அதைத் திறப்பதற்கு திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்தார்களா ? அறிக்கையில் 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ஆம் நாளில் அதாவது அவர்கள் இருக்கிறபொழுது மத்திய உள் துறை அமைச்சகத்திற்கு விம்கோ தொழிற்சாலையிலிருந்து அதிக அளவு குளோரேட் சிவகாசிப் பகுதிக்கு அனுப்ப வேண்டுமென்று கடிதம் எழுதியிருந்ததாக இருக்கிறது. அதற்குப் பிறகு இரண்டரை மாதம் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் எழுதிய பிறகு விம்கோவிலிருந்து

[திரு. ரா. உமாநாத்] [1980 ஜூன் 28

சிவகாசிக்கு அனுப்ப தொடர்ந்து முயற்சிகள் முந்தைய சர்க்கார் எடுத்திருக்கிறதா ? அதற்கான ரெக்கார்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தொழிற் துறையில் 14-வது இடத்திற்குத் தள்ளப்பட்டது என்று சொல்லப்படுவதற்கு எந்தவிதமான ஆதாரமோ, டாகுமெண்டோ, எந்த வெளியீட்டிலும் இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிச் சொன்னவர்களும் அதைச் சொல்லவில்லை. நானும் பல புத்தகங்களைப் படித்துப் பார்த்தேன். ஆனால் எந்தப் புத்தகத்திலும் அதற்கான ஆதாரம் இல்லை. 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ஆம் நாளில் மத்திய உள் துறை அமைச்சகத்திற்கு விம்கோ தொழிற்சாலையிலிருந்து அதிக அளவு குளோரேட் சிவகாசிப் பகுதிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தவிர அதற்குப் பிறகு ஃபாலோ-அப் ஆக்ஷன் எடுத்திருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அந்த குளோரேட் சப்ளை இல்லாத அந்த பீரியடில், குளோரேட் விற்பனைக் கடைகளில் கேட்கும்பொழுது 'நோ ஸ்டாக், நோ ஸ்டாக்' என்று சொல்லப்பட்டதாகத் தகவல். இப்படி நோ ஸ்டாக் என்று சொல்லப்பட்டால் அந்த நிலைமைகளில் கள்ள மார்க்கெட் செய்யும் நிலைமைகள் உள்ளது. அப்படி அந்தச் சர்க்கார் இருக்கிறபொழுது ஏதாவது ரெய்ட் செய்யப்பட்டதா அல்லது இந்தச் சர்க்காரில், கள்ள மார்க்கெட்டில் ஏதாவது இருக்கிறதா என்று ரெய்ட் செய்யப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த தகவல்களை வைத்துக் கொண்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, கூடுதல் குளோரேட்டிற்கு உரிமம் கேட்டு மாவட்ட வருவாய்த் துறை அலுவலகத்தில் நிலுவையில் இருக்கின்ற மனுக்களைப் பைசல் செய்ய ஆய்வு நடத்துவதற்கு வீடுகளுக்குச் சென்று பைசல் செய்ய வேண்டியிருக்கிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூன் 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர் நிலைமைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல ஏற்ற நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படும் குளோரேட்டுக்கான உரிமங்களை, அவர்கள் பயன்படுத்தாமல் பெரிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு இலாபத்திற்கு விற்பனை செய்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் வட்ட ஆட்சியர் இந்தத் தவற்றைக் கண்டுபிடிக்க, கண்காணிக்க தணிக்கை செய்வது கிடையாது. எனவே, இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதைப் பற்றி ஒரு புகார் எழுதிக் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சென்னை மகப்பேறு மருத்துவமனையில் குழந்தைகள் திருட்டுப் போவதைத் தடுப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் கே. சௌரிராஜன், திருவாளர்கள் நா. சுந்தரராஜ், என்.எஸ்.வி. சித்தன், ப. பொன்னுரங்கம், பொ. விஜயராகவன், உ. சுப்பிரமணியன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். டாக்டர் கே. சௌரிராஜன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நானும் கொடுத்திருந்தேன், ஆனால் என் பெயர் சேர்க்கப்படவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை. என் பெயரையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 54-வது விதியின் 6-வது உட்பிரிவின்படி இரண்டு கவன ஈர்ப்புகளும் ஒருவர் பெயராலேயே வரக்கூடாது என்பதால் ஒன்றிலே பெயர் போடடப்பட்டிருக்கிறது, ஒன்றில் விடப்பட்டிருக்கிறது, அவ்வளவுதான்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
ALONE TRIUMPHS